இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 10.12.2025

# இங்கே வள்ளுவர் அங்கே பக்கிம் சந்திரர்!

**“பத்தாண்டு காலம் ஆளும் பிரதமர் மோடி அவர்களே? இந்திய நாட்டை என்னவாக வளர்த்துள்ளீர்கள்? இந்திய நாட்டின் வளர்ச்சி என்ன? சொல்லுங்கள் பார்க்கலாம்”** என்றால்.. “வந்தே மாதரம் என்போம்” என்கிறார்.

வந்தே மாதரம் என்போம். இந்தியத் தாயை எல்லோரும் வணங்கிக் கொண்டு தான் இருக்கிறார்கள். **‘பிரதமர் ஆன நீங்கள் இந்திய நாடு என்னும் தாயை எப்படி வளர்த்து உள்ளீர்கள், அதைச் சொல்லுங்கள்’** என்றால், ‘ஜவஹர்லால் நேரு துரோகம் செய்துவிட்டார்’ என்கிறார்.

கேட்ட கேள்விக்கு இதுவா பதில். ஆனாலும் கூச்சம் இல்லாமல் வந்தே மாதரம் பாடுகிறார் பிரதமர் மோடி. அவர் பாட வேண்டிய பாடல், **‘வந்தே ஏமாத்துறோம்’** என்பதுதான்.

தமிழ்நாட்டுக்கு இரண்டு திருக்குறள் சொன்னால் போதும் என்று நினைப்பதைப் போல, மேற்கு வங்கத்தில் பக்கிம் சந்திரரின் ஒரு பாட்டைச் சொன்னால் போதும் என்று முடிவெடுத்துவிட்டார்கள். மற்றபடி தமிழ் நாட்டுக்கோ, மேற்கு வங்கத்துக்கோ எந்தத் திட்டமும் தேவையில்லை. தரப் போவதும் இல்லை. தர நினைக்கவும் இல்லை.

பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் 1870 ஆம் ஆண்டுகளில் God Save the Queen என்று தொடங்கும் பாடலைக் கட்டாயம் ஆக்கினார்கள். அப்போது பக்கிம் சந்திரர், ‘வந்தே மாதரம்’ பாடலை எழுதினார். அவர் எழுதிய ‘ஆனந்தமடம்’ நாவலில் இந்தப் பாடல் இருந்தது. ‘தாய் மண்ணே, உன்னை நான் வணங்குகிறேன்’ என்பது இந்தப் பாடலின் உள்ளடக்கம் ஆகும். அடிமை இந்தியாவில் சுதந்திர எண்ணத்தை மூட்டுவதற்கு பக்கிம் சந்திரரின் இந்தப் பாடல் பயன்பட்டது. இதனால் இப்பாடலைப் பாட பிரிட்டிஷ் அரசு தடை விதித்தது. ஆனாலும் சுதந்திர இந்தியாவில் ரவீந்திரநாத் தாகூர் எழுதிய ‘ஜன கன மன’ தான் தேசியப் பாடல் ஆனது.

“எம் தோள்களில் பொங்கும் சக்தி நீ,எம் உள்ளத்தில் தங்கும் பக்தி நீ, எம் ஆலயம் எங்கும் ஆராதனை பெறும் தெய்வச் சிலைகளில் திகழும் ஒளி நீ,தாயே வணங்குகிறோம், ஆயுதப் படைகள் கரங்களில் அணிசெய்யும் அன்னை துர்க்கை நீயே,செங்கமல மலர் இதழ்களில் உறையும் செல்வத் திருமகள் நீயே,கல்வித் திறம் அருள் கலைமகளும் நீயே,தாயே வணங்குகிறோம், திருமகளே, மாசற்ற பண்புகளின் மனையகமே, ஒப்புயர்வற்ற எம் தாயகமே....” என்று அந்தப் பாடல் நீளும். தாய் மண் என்று தொடங்கும் இந்தப் பாடல், குறிப்பிட்ட தெய்வம் என்று பின்னர் மாறும் என்பதால் இதனை விடுத்து பொதுவான பாடல் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இதில் முக்கால் நூற்றாண்டுக்குப் பிறகு குறை கண்டுள்ளார் பிரதமர் மோடி. இந்திய விடுதலைப் போராட்டம் பற்றி அவர் ஆற்றி இருக்கும் உரையை அவரது முன்னோர்கள் கேட்டால் தலையில் அடித்துக் கொள்வார்கள்.

இந்தியா தனது விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்த போது, அதற்கு எதிராக இருந்த அமைப்பினர்தான் பா.ஜ.க.வின் முன்னோர்கள்.

*** இந்திய விடுதலைப் போராட்டம் நடந்து கொண்டிருக்கும் போது, “சிறைக்குச் செல்வது மட்டுமே தேசபக்தி அல்ல” என்று சொன்னவர் ஹெட்கேவர்.**

*** டாக்டர் ஹெட்கேவரை 1930 ஆம் ஆண்டு சிலர் சந்தித்து, “நாங்கள் விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுக்கப் போவதாகச் சொன்னார்கள். அப்போது டாக்டர்ஜி, ‘நீங்கள் செல்லுங்கள், ஆனால் உங்கள் குடும்பத்தை யார் கவனித்துக் கொள்வார்கள்?” என்று கேட்டார். இதைச் சொல்லி இருப்பவர் கோல்வால்கர்.**

*** கோல்வால்கர் சொல்கிறார்: “1942 ஆம் ஆண்டுக்குப் பிறகு சட்டத்தை மதிக்கவேண்டிய தேவையில்லை என்று மக்கள் நினைக்கத் தொடங்கினர்”. இதுதான் ‘வெள்ளையனே வெளியேறு’ போராட்டத்தால் இந்தியா கொந்தளித்துக் கொண்டிருந்த நேரம்.**

*** கோல்வால்கர் சொல்கிறார்: “பிரிட்டிஷ் காரர்களைத் தூக்கி எறிந்து நாட்டை விடுவிக்க வேண்டும் என்ற உத்வேகத்துடன் பலர் உழைத்தனர். உண்மையில் இந்த அளவு உத்வேகம் கொள்ளத் தேவையில்லை.”**

*** சுதந்திரப் போராட்ட வீரர்கள் பற்றி கோல்வால்கர் சொல்கிறார்: “வீர மரணத்தைத் தழுவிய அத்தகைய மனிதர்கள் சிறந்த ஹீரோக்கள் என்பதில் சந்தேகமில்லை. இருந்த போதிலும், அத்தகைய நபர்கள் நம் சமூகத்தில் இலட்சியங்களாகக் கருதப்படுவது கிடையாது”**

இவை அனைத்தும் கோல்வால்கர் எழுதிய நூலில் தான் இருக்கின்றன. இவர்கள் தான் 75 ஆண்டுகள் கழித்து தேசபக்த வகுப்பு எடுக்கிறார்கள்.

“முஸ்லிம் லீக் கட்சி வந்தே மாதரம் பாடலை வெறுத்தது. ஆகவே வந்தே மாதரம் பாடல் இஸ்லாமியர்களை எரிச்சல் அடைய செய்யலாம் என கருதிய முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு அப்பாடலை தேசிய கீதமாக ஆக்கவில்லை” என பிரதமர் நரேந்திர மோடி விமர்சித்திருக்கிறார். முஸ்லீம் லீக்குடன் இந்து மகாசபை கூட்டணி ஆட்சி நடத்தியது பிரதமர் மோடிக்குத் தெரியுமா?

1942 ஆம் ஆண்டு கான்பூரில் நடைபெற்ற இந்து மகாசபை 24 ஆவது மாநாட்டில் சாவர்க்கர் பேசும் போது சொல்கிறார்: “நடைமுறை அரசியலிலும், நியாயமான சமரசங்களின் மூலம் நாம் முன்னேற வேண்டும் என்பதை இந்து மகாசபை அறிந்திருக்கிறது. அண்மையில், சிந்துப் பகுதி இந்து மகா சபை தனக்கு விடுக்கப்பட்ட அழைப்பின்பேரில், கூட்டணி அரசாங்கத்தை நடத்துவதற்கு முஸ்லிம் லீக்குடனேயே கைகோர்த்துக் கொள்ளும் கடமையை நிறைவேற்றி உள்ளது என்பதைப் பாருங்கள். வங்காளத்தில் என்ன நடந்தது என்பது அனைவருக்கும் தெரியும். மிகப் பணிந்துபோகும் தன்மைகொண்ட காங்கிரசுகாரர்கள்கூட சமாதானப்படுத்த முடியாத, பக்குவமடையாத முஸ்லிம் லீக் கட்சியினர்கூட இந்து மகாசபையுடன் தொடர்பில் வந்த பின்னர் நியாயமான சமரசம் செய்து கொள்பவர்களாகவும் நேசத்தன்மை உடையவர்களாகவும் மாறினர். கூட்டணி அரசாங்கமானது ஃபஸ்லுல் ஹக்கின் தலைமை மற்றும் நமது மதிப்புக்குரிய டாக்டர் சியாம பிரசாத் முகர்ஜியின் திறமைமிகு வழிகாட்டுதலின் கீழ் சுமார் ஒரு வருட காலம் இரண்டு சமூகங்களுக்கும் பயன்தரும் வகையில் வெற்றிகரமாகச் செயல்பட்டது” என்று பேசி இருக்கிறார். தனக்குத் தேவை என்றால் எவரையும் உறிஞ்சத் தயங்காதவர்கள் என்பதற்கு இது உதாரணம் அல்லவா?

அதனால்தான் சொல்கிறோம், பிரதமர் பாட வேண்டிய பாடல், **‘வந்தே ஏமாத்துறோம்’** என்பதுதான்.



காங்கிரஸ் கட்சி, நாடாளுமன்றக் குழுத் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களின் பிறந்த நாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பில் நாடாளுமன்ற மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி என்.சிவா, வாழ்த்துத் தெரிவித்தார். உடன் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி., கிரிராஜன் எம்.பி. ஆகியோர் உள்ளனர்.

### கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த – பெற்றோரை இழந்து வாடும் நான்கு குழந்தைகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள்!

## இனி இந்த நான்கு குழந்தைகளும் நம் அரசின் குழந்தைகள்! தாயும் தந்தையுமாய் நமது ‘திராவிட மாடல்’ அரசு என்றும் இருக்கும்!

சென்னை, டிச. 10 –

கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பெற்றோரை இழந்துவாடும் நான்கு குழந்தைகளின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கியதையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவில்,

“இந்த நான்கு குழந்தைகளும் இனி நம் அரசின் குழந்தைகள்! தாயும் தந்தையுமாய் நமது திராவிட மாடல் அரசு என்றும் இருக்கும்” என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் வலைதளப்பதிவு வருமாறு:-

### சமூக வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் நெகிழ்ச்சி!

**இந்த நான்கு குழந்தைகளும் இனி நம் அரசின் குழந்தைகள்! அவர்களது எதிர்காலத்தை அரசு பாதுகாக்கும்!**

**சொன்னபடியே,**

**இலாவண்யாவிற்கு ரூ.2.50 லட்சம் வீட்டுமனைப் பட்டா, ரூ.3,55,660 மதிப்பீட்டில் ‘கலைஞர் கனவு இல்லம்’ வழங்க ஆணை.**

**சங்கராபுரம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் கணினி உதவியாளர் பணி நியமன ஆணை;**

**ரிஷிகா மற்றும் அபினேஷிற்கு - ‘அன்புக் கரங்கள்’ திட்டத்தின் மூலம் மாதந்தோறும் தலா ரூ.2000 உதவித்தொகை;**

**ரீணாவிற்கு திறன் அழகுக் கலை பயிற்சி பெறுவதற்காக ரூ.6000 ஆகியவற்றை வழங்கினேன்.**

**நாளை எனும் நம்பிக்கையைப் பற்றிக் கொண்டு வாழ்வில் அவர்கள் உயர்ந்திட தாயும் தந்தையுமாய் என்றும் இருக்கும் நமது திராவிட மாடல் அரசு!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### ஈ.டி., சி.பி.ஐ., தேர்தல் ஆணையத்தை வைத்து ஏதாவது செய்யலாம் என பா.ஜ.க. முயற்சி செய்கிறது!

## தி.மு.க.வை விமர்சிக்க எடப்பாடிக்கு யோக்கியதை இல்லை!

### மதுரையில் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

மதுரை, டிச. 10 -

ஈ.டி., சி.பி.ஐ., தேர்தல் ஆணையத்தை வைத்து ஏதாவது செய்யலாம் என பா.ஜ.க. நினைப்பதாகவும் தி.மு.க.வை விமர்சிக்க எடப்பாடி பழனிசாமிக்கு யோக்கியதையும், தகுதியும் இல்லை என தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி காட்டமாக தெரிவித்தார்.

மதுரை பாண்டி கோவில் அருகே உள்ள தனியார் திருமண மண்டபத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வழக்கறிஞர் அணி சார்பில் மதச்சார்பின்மை என்ற தலைப்பில் சிறப்பு கருத்தரங்கம் நடைபெற்றது.

இக்கருத்தரங்கத்திற்கு தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமை வகித்து சிறப்புரையாற்றினார்.

தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர் ராதாகிருஷ்ணன், சூர்யா வெற்றி கொண்டான், தலைமைக் கழக வழக்கறிஞர் கலாநிதி, மாநில துணைச் செயலாளர் ராஜா முகமது உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர்கள் கோகுல், தேவசேனன், சிவனேசன் உள்ளிட்டோர் வரவேற்புரை நிகழ்த்தினர்.

மேலும் இந்த கருத்தரங்கில் தி.மு.க. உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம், காங்கிரஸ் கட்சி சார்பில் வழக்கறிஞர் மாரியப்பன், ம.தி.மு.க. சார்பில் வழக்கறிஞர் செந்தில் செல்வன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் வழக்கறிஞர் பார்வேந்தன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் எஸ்.பாரதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வழக்கறிஞர் கே.கே.சாமி உள்ளிட்டோர் கருத்துரை வழங்கினர்.

கருத்தரங்கின் போது கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவரிடம்,

கே.என்.நேரு மீது வழக்குப்பதிவு செய்ய அமலாக்கத்துறை கடிதம் எழுதியது தொடர்பான கேள்விக்கு,

தேர்தலுக்கு இன்னும் 4 மாதங்கள் உள்ள நிலையில் தி.மு.க. அமைச்சர்கள் மீது அமலாக்கத்துறை நெருக்கடி கொடுத்து வருகிறது.

பீகார், கர்நாடகாவில் பா.ஜ.க. அரசு என்ன செய்தார்கள் என்று அனைவருக்கும் தெரியும்.

தி.மு.க. ஆட்சியை சிறப்பாக நடத்தி வருவதால் ஈ.டி., சி.பி.ஐ., தேர்தல் ஆணையம் வைத்து ஏதாவது செய்யலாம் என பா.ஜ.க. முயற்சி செய்கிறது.

எங்களுக்கு மடியில் கனமில்லை வழியில் பயமில்லை, நாங்கள் பா.ஜ.க. அரசை துணிச்சலாக எதிர்க்கிறோம்.

தனது சம்மந்தி வீட்டில் ஈ.டி. சோதனை நடத்திய போது முகத்தை மூடிக் கொண்டு சென்றவர் தானே எடப்பாடி பழனிச்சாமி, தி.மு.க.வை தொட்டுக் கூட பார்க்க முடியாது.

அமலாக்கத்துறை, சி.பி.ஐ., தேர்தல் ஆணையத்தை கையில் வைத்துக் கொண்டு எதையாவது செய்யலாமா என பா.ஜ.க. முயற்சிக்கிறது.

75 ஆண்டுகளில் பல சோதனைகளை கண்ட இயக்கம் தி.மு.க. அமலாக்கத்துறையோ அல்லது சி.பி.ஐ.யோ எந்த விசாரணையை மேற்கொண்டாலும் அதை சந்திக்க தயார். அதனால் எவனுக்கும் யாருக்கும் நாங்கள் பயப்பட மாட்டோம்.

எடப்பாடி பழனிசாமி தன்னுடைய சம்மந்தி வீட்டில் ரெய்டு நடத்தியதும் கார் மாறி மாறி போய் டெல்லிக்கு சென்றுவிட்டு எங்களை பற்றி பேசுகிறார்.

எங்களுக்கு மடியில் கனமில்லாததால் தான் ஒன்றிய அரசை துணிச்சலோடு எதிர்க்கிறோம், நேற்று கூட கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் இதே மதுரையில் ஒன்றிய அரசுக்கு சவால் விட்டு சென்றார்.

ஆனால் பழனிசாமி மகனையும் முக்கிய புள்ளியையும் டெல்லிக்கு அழைத்துக்கொண்டு முகத்தை மூடிக்கொண்டு சென்றார்.

நாங்கள் துணிச்சலோடு, தைரியத்தோடு ஒன்றிய அரசை எதிர்க்கிறோம்.

இதுபோன்ற பிரச்சினைகள் எங்களுக்கு சகஜம். இதையெல்லாம் பார்த்து வளர்ந்தவர்கள் நாங்கள்.

எடப்பாடி பழனிசாமி எங்களை விமர்சனம் செய்து பேசுவதை பார்த்து மக்கள் சிரிக்கத்தான் செய்கிறார்கள்.

எங்களை விமர்சிக்க எடப்பாடி பழனிசாமிக்கு தகுதி யோக்கியதை இல்லை.

மகாராஷ்டிராவில் பா.ஜ.க. என்ன செய்தது எனத்தெரியும். குடும்பத்தை பிரிப்பார்கள். பிரச்சினை ஏற்படுத்துவார்கள். தி.மு.க. வலிமையாக உள்ளதால் எதையாவது செய்யலாம் என முயன்று வருகிறார்கள்.

அடிக்க அடிக்க தான் பந்து உந்தும். அதுபோல வழக்கு போட போட தான் அமைச்சர்கள் உறுதியாக நிற்பார்கள். யாரும் ஓட மாட்டார்கள்.

திருப்பரங்குன்றத்தில் உள்ளூர் மக்கள் அமைதியாக உள்ளார்கள். வெளியே இருந்து சென்று கலவரம் செய்கிறார்கள். மதுரை மண் வரலாற்றுச் சிறப்புமிக்க மண். அந்நியர்களை உள்ளே விடாது. இடம் கொடுக்காது. அதை அறியாதவர்கள் சீண்டிப்பார்க்கிறார்கள்.

திருப்பரங்குன்றம், திருச்செந்தூர் கும்பாபிஷேகம் வெகு விமர்சையாக நடந்தது. வழக்கத்தை விட அதிகமான பக்தர்கள் கலந்து கொண்டனர். பக்தர்களும் மக்களும் முதல்வர் பின்னால் தான் உள்ளார்கள்.

விஜய் தந்தையோடு திருச்சி வேலுசாமி சந்திப்பு குறித்த கேள்விக்கு,

திருச்சி வேலுச்சாமி கட்சியில் இல்லை என செல்வப் பெருந்தகையே கூறிவிட்டார். அதனால் இல்லாதவரை பற்றி பேச தேவையில்லை.

பிரவின்கார்த்தி விஜயுடன் பேசியது குறித்த கேள்விக்கு,

குடும்பத்தை பிரிப்பார்கள். தமிழ்நாட்டில் கூட அப்பா மகனை இரண்டாகவும், அ.தி.மு.க.வை 4 ஆகவும் பிரித்துள்ளனர். மோடி அமித்ஷா வித்தைகளையெல்லாம் முறியடிக்கும் இயக்கம் தி.மு.க. என தெரிவித்தார்.

மேலும் இந்த கருத்தரங்கில் தி.மு.க. மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பெ. குழந்தைவேலு, பொதுக்குழு உறுப்பினர் வைகை பரமன் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வழக்கறிஞர்கள் திரளாக பங்கேற்றனர்.



மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வழக்கறிஞர் அணி சார்பில் மதுரையில் நடைபெற்ற மதச்சார்பின்மை எனும் தலைப்பிலான கருத்தரங்கில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையாற்றினார். உடன் தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர்கள் ராதாகிருஷ்ணன், சூர்யா வெற்றி கொண்டான், உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பொன்.முத்துராமலிங்கம், தலைமைக் கழக வழக்கறிஞர் கலாநிதி, மாநில துணைச் செயலாளர் ராஜா முகமது, மூத்த வழக்கறிஞர்கள் வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர்கள் வி.எம்.கோகுல், சிவனேசன், தேவசேனன் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வழக்கறிஞர் அணியினர் திரளாக பங்கேற்றனர்.